இது

நம்தேசம்

16.09.2026 - 30.09.2026



நல்லூரில் நிறுவப்பட்ட தியாகதீபத்தின் சிலை அகற்றம் : பின்னணியில் சி.வீ.கே!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தின் பெயர்ப்பலகை இடித்தழிப்பு!

அனோஜனின் மரண தண்டனையை இரத்துச் செய்க : கஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை!

நல்லூரில் வைக்கப்பட்ட தியாகி திலீபனின் சிலை அகற்றம் : பின்னணியில் சி.வி.கே!

- எழுந்துள்ள குற்றச்சாட்டு -

யாழ்ப்பாணம் – நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவச்சிலை 27.09.2026 அன்று யாழ்ப்பாணம் காவல்துறையினரால் பலவந்தமான முறையில் அகற்றப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தங்களுக்கு எந்தவித அறிவுறுத்தலும் வழங்காமல் திடீரென வாகனங்களில் வந்த பதினைந்துக்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதணிகளுடன் வந்து அந்த சிலையை உடைத்துச்சென்றதாக தங்களுடைய ஆதரவாளர்கள் தெரிவித்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவத்திற்கு பின்னால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் இருக்கின்றார் என்ற வலுவான குற்றச்சாட்டையும் முன்வைப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தியாக தீபம் திலீபனின் திருவுருவச்சிலையை உடைத்துச் சென்றமையை வன்மையாக கண்டிக்கின்றேன். இது அநுர அரசாங்கத்தின் இனவெறியின் மற்றுமொரு முகத்தை வெளிப்படுத்துகின்றது.

அநுரகுமார திசாநாயக்க தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காக தன்னுடைய முகவர்களைப் பயன்படுத்தி தேர்தல் காலப்பகுதியில் நினைவேந்தல்களை அனுமதிப்போம், சிலைகளை நிறுவுவோம் என்று மேடை மேடையாகச் சொல்லியிருந்தார்கள்.

அநுர அரசு சார்பில் போட்டியிட்டவர்கள் மாவீரர்களை நினைவுகூருவதற்கான சந்தர்ப்பம் உறுதிப்படுத்தப்படும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தனர்.

மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபய ராஜபக்ச போன்றோருக்கும் அநுரகுமார திசாநாயக்கவிற்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை. தமிழர்களுக்கு எதிரான இனவெறி மனப்பான்மை ஒரே மாதிரி இருக்கின்றது என்பதை இந்த செயற்பாடு உறுதிப்படுத்துகின்றது.

திலீபனின் திருவுருவச்சிலையை உடைத்து அகற்றியதன் மூலம் அநுர அரசாங்கம் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவமதிப்பதுடன் இழிவுபடுத்தியிருக்கின்றது.

கடந்த 18ஆம் திகதி திலீபனின் நினைவேந்தலுக்காக நல்லூரில் உள்ள திலீபன் நினைவேந்தல் பூங்காவில் ஒலி பெருக்கிக்கான அனுமதியை பெற யாழ் மாநகரசபை மேஜரிடம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் உறுப்பினர்கள் தொடர்பு கொண்டபோது அவர் கட்சி தலைமை தேவையில்லாத சிக்கல்கள் வரும் என்று தெரிவிப்பதாக தெரிவித்தார்.

இதையடுத்து நான் சி.வி.கே. சிவஞ்ஞானம் ஐயாவுடன் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் என்னிடம் மிக காட்டமாக கேட்டார், நீங்கள் யாரை கேட்டு இந்த சிலை வைக்கின்றீர்கள், 26ஆம் திகதியோடு இந்த சிலை அகற்றப்படவில்லை என்றால் நான் இந்த சிலையை எடுப்பேன் என என்னிடம் தெரிவித்தார்.

நான் எதிர்பாக்கவில்லை இவர் இவ்வளவு கீழ்த்தரமாக செய்வார் என்று, காவல்துறையினரின் கைக்கூலிகளாக தமிழரசு கட்சி செயற்பட்டிருக்கின்றது என்பதுடன் தமிழரசு கட்சியும் அநுர அரசும் சேர்ந்து தான் இந்த கூட்டு நாடகத்தை ஆடியிருக்கிறார்கள். இந்த செயற்பாட்டிற்கு தமிழரசுக் கட்சி பொறுப்பேற்க வேண்டும்." என அவர் மேலும் தெரிவித்தார்.



அனோஜனது மரண தண்டனையை
இரத்து செய்ய தலையிடுமாறு
கஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை

சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டு, தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை இளைஞர் சிவராசா அனோஜனின் தண்டனையை இரத்து செய்வதற்கும், அவருக்கு சட்டரீதியான மற்றும் இராஜதந்திர ரீதியான உதவிகளை வழங்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , இலங்கையின் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்துடன் 18.09.2026 அன்று தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிவராசா அனோஜன் சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், ஆரம்பத்தில் அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 3 மில்லியன் சவூதி ரியால் அபராதமும் விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செய்யப்பட்ட மேன்முறையீட்டின் தீர்ப்பில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், அனோஜனின் மரண தண்டனையை மறுபரிசீலனை செய்வதற்கும், தண்டனையை இரத்து அல்லது குறைப்பதற்கும், சவூதி அரேபிய அதிகாரிகளுடன் அவசரமான இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் தியாகதீபம் திலீபனின் 39ம் ஆண்டு நினைவேந்தல் அனுஸ்டிப்பு

- நினைவு ஊர்திப் பவனியும் முன்னெடுப்பு -

தியாக தீபம் திலீபனின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை, களுவாஞ்சிகுடி, மாங்காடு உள்ளிட்ட பகுதிகளில் 17.09.2026 அன்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திக்கு பொது மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தின் வழிகாட்டிப் பெயர்ப் பலகை இடித்தழிப்பு

- நினைவேந்தல் கட்டமைப்பு கண்டனம் -

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல் முற்றத்தின் வழிகாட்டிப் பலகை இடித்தழிக்கப்பட்டமைக்கு வட,கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

குறித்த கட்டமைப்பின் இணைத்தலைர்களான, அருட்தந்தை லியோ ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அகத்திகள் அடிகளார் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,
முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழினப் படுகொலையை நினைவேந்துவதற்கான முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கு செல்வதற்கான பாதையை சுட்டிக்காட்டுவதற்காக முல்லைத்தீவு பரந்தன் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வழிகாட்டி பலகை கடந்த 2026.09.14 அன்று முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை காரணம் காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இடித்தழிக்கப்பட்டுள்ளமையானது அரச திணைக்களங்கள் ஊடாக தமிழினம் மீதான ஒடுக்குமுறைகள் தடையின்றி தொடர்வதனையே காட்டி நிற்கின்றது.

வகைதொகையின்றி தமிழினம் கொத்துக்குண்டுகளாலும், இன்னும் உலகில் மனித குலத்திற்கெதிரானதென தடைசெய்யப்பட்ட ஆயுதங்களாலும், போர் முறைகளாலும் திட்டமிட்டு அழித்தொழிக்கப்பட்ட இனப்படுகொலையை கண்ணீரோடு நினைவுகூரும் உரிமை கூட தமிழினத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதை காட்டி நிற்கும் ஒன்றாகவே இவ் வழிகாட்டிப் பலகையின் இடித்தழிப்பு அமைந்துள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் வீதியின் வீதியோரங்கள் நெடுகிலும் இராணுவமுகாம்களிற்கான பெயர்ப்பலகைகளும், காவலரண்களும் அனுமதியற்ற கட்டடங்களாகவும் கட்டமைப்புகளாகவும் அமைக்கப்பட்டுள்ளமை வெளிப்படையானதொன்றாகும். இடித்தழிக்கப்பட்ட இவ்வழிகாட்டி பலகைக்கு அப்பால் சில 100மீற்றர் தூரம் தள்ளி முள்ளிவாய்க்கால் மேற்குப்பகுதியில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமின் பெயர் பொறிக்கப்பட்ட கட்டமைப்பு, இதே வீதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வெற்றிச் சின்னம் போன்ற இன்னும் பல கட்டுமானங்கள் அனுமதியற்ற கட்டுமானங்களாகவே உள்ளன.

இந்நிலையில் இவ்வழிகாட்டி, அனுமதியற்ற கட்டடம் என முல்லைத்தீவு பொலிசாரால் கடந்த 2026.06.11 இல் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தொடுக்கப்பட்ட டீஃ692ஃ2026 இலக்க வழக்கின் மீதான கட்டளையாகவே இவ்வழிகாட்டி அமைப்பை அகற்றுமாறு பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றால் கட்டளை வழங்கப்பட்டது.

ஏற்கனவே முல்லைத்தீவு பொலிஸாரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இவ்வழிகாட்டிப்பலகை மேல் அமைக்கப்பட்டிருந்த ‘காயமடைந்த பாடசாலைச் சிறுவன் ஒருவன் இரத்தம் தோய்ந்த ஆடையுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திற்கு செல்லும் பாதையை சுட்டிக்காட்டுவது போல்’ அமைக்கப்பட்டிருந்த சிலையை அகற்றுவதற்காக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்ட போதிலும், நீதிமன்றினால் அச்சிலையை அகற்றுவதற்கான கட்டளை வழங்கப்படவில்லை. இருந்தபோதிலும் இரவோடிரவாக இனந்தெரியாதோரால் அச்சிலை அகற்றப்பட்டது.
தற்போதைய நிலையில்பொலிஸாரின் ஆதரவுடன் இந்த முள்ளிவாய்க்கால் முற்ற வழிகாட்டல் கல்லும் அகற்றப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் இலங்கையில் எந்த அரசுகள் ஆட்சிப்பீடம் ஏறினாலும் தமிழர் விரோத செயற்பாடுகளையும், தமிழின அழிப்பு செயற்பாடுகளையும் கட்டமைக்கப்பட்ட வகையில் அரங்கேற்றி வருவது வெள்ளிடைமலை. ஆகவே அரசின்னுடைய இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன், தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு விரைந்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



சட்டமூலத்தை வாசிக்காமலேயே ஆதரவு கொடுத்த அனுர தரப்பு எம்.பிகள்!

- ஐ.நா வதிவிடப் பிரதிநிதி வசனம் -

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட வேளையில், நான் சுமார் 45 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கதைத்தேன். ஆனால் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக அவர்களில் பலர் வாக்களித்திருந்தார்கள். ஏனெனில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவை அவர்கள் வாசித்திருக்கவில்லை. ஒரு சட்டம் அல்லது கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும்போது அதனை முழுமையாக வாசிப்பது என்பது அடிப்படையான ஒரு விடயம். அதனைச் செய்யமுடியாவிடின், பாராளுமன்ற உறுப்பினராகக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்-ஆன்ரே பிரான்சே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்குவதற்கும், சிவில் சமூக இடைவெளியை சுருக்குவதற்கும் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் தர நியமங்கள் அரசாங்கத்தினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புக்களை உள்ளடக்கிய இலங்கை சிவில் சமூக நிதி நடவடிக்கைப் பணிக்குழு வலையமைப்பு தொடர்ச்சியாகக் கரிசனை வெளியிட்டு வந்தது.

இந்நிலையில் இவ்வாண்டு நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் இலங்கை தொடர்பான மதிப்பீடு நடைபெறவுள்ள நிலையில், இதன்போது பரிசீலிக்கப்படவேண்டிய விடயங்களை உள்ளடக்கி இலங்கை சிவில் சமூக நிதி நடவடிக்கைப் பணிக்குழு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்டு, நிதி நடவடிக்கை பணிக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிழல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வு வியாழக்கிழமை (17) கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பன்னாட்டு இராஜதந்திரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரது பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, நிதி நடவடிக்கைப் பணிக்குழுவுக்கு இவ்வாறானதொரு நிழல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டியது அவசியம் என வலியுறுத்தியதுடன், இந்நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அரச சார்பற்ற சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளபோதிலும், பல சந்தர்ப்பங்களில் அப்பங்களிப்பு குறைத்து மதிப்பிடப்படுவதாகக் கரிசனை வெளியிட்டார்.

அத்தோடு, 'சிவில் சமூக அமைப்புக்களைத் தமது பங்காளிகளாகப் பேணுவது அரசுக்கும் நாட்டுக்கும் நேர்மறையான விளைவுகளையே பெற்றுத்தரும்.

ஒரு கண்காணிப்புக் கட்டமைப்பாக செயற்படக்கூடிய சிவில் சமூக அமைப்புக்கள் உலகளாவிய நிலைவரங்களுக்கும் உள்நாட்டு யதார்த்தத்துக்கும் இடையிலான பாலமாகத் தொழிற்படும். அதுமாத்திரமன்றி சிவில் சமூகத்தின் இடைவெளியை உறுதிப்படுத்துவது என்பது இரண்டாம் பட்சமான விடயமல்ல. மாறாக அமைதி, மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை நிலைநாட்டுவதற்கு அது இன்றியமையாததாகும். எனவே சிவில் சமூக அமைப்புக்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு இடமளிக்கப்படவேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோன்று நாட்டில் துடிப்புடன் இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு நிதி அளிப்பது என்பது நாட்டின் முன்னேற்றத்துக்கான முதலீடாகவே அமையும் எனச் சுட்டிக்காட்டிய ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, கடந்த ஆண்டு 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தின் பின்னரான மீட்சி நடவடிக்கைகளில் சிவில் சமூக அமைப்புக்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவுகூர்ந்தார்.

அதேவேளை பயங்கரவாத ஒழிப்பு எனக் கூறி ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டமை நினைவுறுத்திய அவர், தற்போது அரசாங்கத்தினால் புதிதாக கொண்டுவரப்படும் சட்டங்கள் தொடர்பில் போதுமான கலந்தாலோசனைகள் முன்னெடுக்கப்படவில்லை எனக் கரிசனை வெளியிட்டார்.

'நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட வேளையில், நான் சுமார் 45 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கதைத்தேன். ஆனால் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக அவர்களில் பலர் வாக்களித்திருந்தார்கள். ஏனெனில் நிகழ்நிலைக்காப்புச்சட்டவரைவைஅவர்கள் வாசித்திருக்கவில்லை. ஒரு சட்டம் அல்லது கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும்போது அதனை முழுமையாக வாசிப்பது என்பது அடிப்படையான ஒரு விடயம். அதனைச் செய்யமுடியாவிடின், பாராளுமன்ற உறுப்பினராகக் கூடாது' என்றும் அவர் தெரிவித்தார்.

தியாகதீபம் திலீபனின் சிலை அகற்றம் சீமான் கண்டனம்

தியாகதீபம் திலீபனின் நினைவு நாளை ஈழத்தமிழர்கள் உணர்வோடு கடைப்பிடித்த நிலையில், யாழ்ப்பாணம் நல்லூரில் இருந்த அவரது உருவச்சிலையை இலங்கை பொலிஸார் அகற்றி எடுத்துச் சென்றிருப்பது பெரும் வேதனையையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்துகிறது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்ட அவர்,

தங்களுக்காக போராடி உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் மக்களின் உரிமையில் பொலிஸார் தலையிடுவதை எவ்வகையிலும் ஏற்க முடியாது. உண்ணாமல், நீரும் அருந்தாமல், அகிம்சை வழியில் தன் மக்களுக்காக உயிர் துறந்தவர் திலீபன்.

அவர் மறைந்து 39 ஆண்டுகள் கடந்த பின்னரும், அவரது உருவச்சிலையைக்கூடச் சகித்துக்கொள்ள முடியாதது ஏன்? உயிரோடு இருந்தபோது அவரது அறப்போராட்டத்துக்குச் செவிசாய்க்காதவர்கள், இன்றும் அவரது நினைவைக் கண்டு அஞ்சுகிறார்களா?

இது இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனவெறி மனநிலை இன்னமும் மறையவில்லை என்பதையே காட்டுகிறது. ஒரு மக்களின் வரலாற்றை மறைக்கலாம் அவர்கள் துயரத்தைப் பேசுவதற்கும் தியாகிகளை நினைவுகூர்வதற்கும் தடை விதிக்கலாம் என்று இலங்கை அரசு எண்ணுகிறதா?

சிலையை அகற்றுவதால் திலீபனைத் தமிழர்களின் நெஞ்சிலிருந்து அகற்ற முடியாது. அகிம்சையின் அடையாளமான தியாகதீபம் திலீபனின் உருவச்சிலையை அகற்றிய இலங்கை பொலிஸாரின் செயல் வன்மையான கண்டனத்திற்குரியது!

இத்தகைய நடவடிக்கை ஈழத்தமிழர்களின் மனக்காயத்தை மேலும் ஆழப்படுத்தவே செய்யும். இலங்கையில் ஆட்சிகள் மாறுகின்றன் ஆட்சியாளர்களின் முகங்களும் வாக்குறுதிகளும் மாறுகின்றன.

ஆனால் தமிழர்களின் நினைவுகூரும் உரிமையைக்கூட மதிக்காத அரசின் அணுகுமுறை மாறவில்லை. இந்தச் செயல் அதற்கு இன்னுமொரு சான்றாக நிற்கிறது.

உலக நாடுகள் இனியாவது ஈழத்தமிழர்களின் குரலை நேர்மையாகக் கேட்க வேண்டும். தமிழர்களின் அடிப்படை உரிமைகளும் வரலாற்று நினைவுகளும் தொடர்ந்து மறுக்கப்படும் நிலையில், ஒற்றை இலங்கைக்குள் அவர்களுக்கு நீதியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்று எத்தனை காலம் நம்பச் சொல்லப் போகிறீர்கள்?

ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு, கண்ணியம், தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை ஆகியவற்றுக்காக உலக நாடுகள் உறுதியான குரல் எழுப்ப வேண்டும். தியாகதீபம் திலீபனின் உருவச்சிலையை அகற்றிய பொலிஸாரின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அகற்றப்பட்ட சிலையை உரிய இடத்தில் மீண்டும் நிறுவவும், ஈழத்தமிழர்கள் அச்சமின்றி நினைவுகூரும் உரிமையை உறுதி செய்யவும் இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமையை பாதுகாக்க இந்தியா முன்வர வேண்டும்

- முன்னணியின் தேசிய அமைப்பாளர் சுரேஸ் கோரிக்கை -

இந்தியாவின் நலனுக்காக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தொடர்ந்து பின் நிற்கும் எனவே எங்களுடைய மக்களின் நிலையான இருப்பை தக்க வைப்பதற்கு தமிழ் மக்களின் சுயாட்சியை அங்கீகரித்து தமிழ் மக்களுடைய அரசியல் உரிமையை பாதுகாக்க சமஷ்டி முறையை ஏற்படுத்த இந்தியா தொடர்ந்து முன்வரவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தியாக தீபம் திலீபனின் 39 ம் ஆண்டு நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஏற்பாட்டில் 26.09.2026 அன்று காந்தி பூங்காவில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி சுடர் ஏற்றி எழுச்சியுடன் உணர்வு பூர்வமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். அதன் பின்னர் நினைவு பேருரை ஆற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபன் இளவயதில் மருத்துவ பட்டப்படிப்பை தொடர்ந்து கொண்ட காலத்தில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் மீது சிங்களவர்கள் மேற்கொண்ட வன்முறைகள் அத்து மீறிய குடியேற்றம் போன்ற பல வன்முறைகளை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டதை கண்டு கொண்டார்

இவர் தமிழ் தேசம் மீது கொண்ட பற்றின் காரணமாக இந்த இனத்துக்காக தமிழ் மக்களின் இருப்பு இந்த தீவில் நிலையாக இருக்க வேண்டும் என்பதற்காக தனது மருத்துவ பட்டப்படிப்பை விட்டுவிட்டு தன்னை ஆயுத போராட்டத்தில் இணைத்துக் கொண்டு இந்தியாவிடம் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அகிம்சை போராட்டத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இந்த அகிம்சை போராட்டத்துக்கு இந்தியா முன் உதாரணமாக இருக்கும் என ஆயுத போராட்டத்தை விட்டு அகிம்சை போராட்டமாக சாகும் வரை உண்ணாவிரம் நல்லூர் ஆலய முன்றலில் தொடர்ந்து 12 நாட்கள் இருந்து உயிரிழந்தார் இந்தியா அந்த அகிம்சை போராட்டத்துக்கு மதிப்பளிக்காத இருந்துள்ளது.

தமிழர்களை பொறுத்த மட்டில் தமிழர்கள் 76 வருடங்கள் அடக்கு முறைக்கு முற்பட்டு தொடர்ந்து போராடி வருகின்றனர் இலங்கைக்கு அண்மையில் இருக்கும் பெரும் வல்லரசான இந்தியாவை நம்பி தமிழ் மக்கள் இந்த தீவில் வாழ்கின்றனர் என வலியுறுத்தி வந்துள்ளோம்.

இந்த வலியுறுத்தலின் உச்சக்கட்டம் தான் தியாக தீபன் அகிம்சை வழி போராட்டம் இந்த நிலையில் தமிழர்கள் தற்பாதுகாப்புக்காக ஆயுதவழி போராட்டம் செய்து கொண்ட போதும் இந்தியாவை முழுமூச்சாக நம்பினர் ஆனால் இந்தி தனது பூலோக அரசியல் நலனுக்காக எங்கள் மக்களின் நலனை கருத்தில் கொள்ளாது எமது மக்களை காக்க தவறிவிட்டது

இருந்தபோதும் நாங்கள் வடகிழக்கில் தொடர்ந்து போராடி வருகிறோம் இந்த புனிதமான நாளில் அங்கு வெடுக்குநாறி மலையிலே சிவனுக்கு பூஜை செய்வதற்காக எங்கள் மக்கள் போரட்டம் நடாத்தி வருகின்றனர். அங்கு இராணுவம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளது

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என தீயாக தீபம் திலீபன் கூறிச் சென்றுள்ளார் அந்த போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது நாங்கள் இந்தியாவை முழுமூச்சாக நம்பியிருக்கிறோம். இன்று வடகிழக்கில் இந்திய அரசாங்கம் பல அபிவிருத்தி திட்டங்களை செய்து கொண்டிருக்கிறது ஆனால் இந்த நாட்டின் அரசு தங்களின் நலனுக்காக அந்த அபிவிருத்தி பணிகள் இழுபறிகள் செய்கிறது

ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களின் உரிமைகளை முடக்கி தமிழ் மக்களை தொடர்ச்சியாக அடக்குமுறைக்குள் வைத்துக் கொண்டு தமிழ் மக்களை அடிமையாக்க நாங்கள் தயாரில்லை ஆகவே இந்த விஷயத்தில் இந்தியா செவிமடுக்க வேண்டும்.

உங்களுடைய நலனுக்காக வடகிழக்கு தமிழர்கள் நாங்கள் தொடர்ந்து நிற்போம் ஆனால் எங்களுடைய மக்களின் நிலையான இருப்பை தக்க வைப்பதற்கு மக்களுடைய அரசியல் உரிமையை பாதுகாக்க முன்வர வேண்டும் அத்துடன் தமிழ் மக்களின் சுயாட்சியை அங்கிகரித்து இந்த ஒற்றையாட்சி முறையை ஒழித்து சமஷ்டி முறையை ஏற்படுத்த வேண்டிய தார்மீக கடமை இந்தியாவுக்கு உள்ளது

2009 கடைசி யுத்தம் வரை எங்கள் மக்கள் இந்தியாவை நம்பி இருந்தனர் ஆனால் அந்த ஆயுத போராட்டம் இந்தியாவால் மௌனிக்கப்பட்டிருந்தது அது மிகவும் கவலையளிக்கிறது இருந்து போதும் தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்த இந்தியா தொடர்ந்து முன்வர வேண்டும் என்றார்.

கீரிமலையில் கொட்டப்படும் ஆபத்தான மருத்துவக் கழிவுகள்

- அம்பலப்படுத்திய மருத்துவர் -

தெல்லிப்பழை வைத்தியசாலையின் ஆபத்தான மருத்துவ கழிவுகள் உள்ளிட்ட வைத்தியசாலை கழிவுகளை கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் கீரிமலை பகுதியில் கொட்டி வருவதாக, வலி. வடக்கு பிரதேச சபையின் ஊழியர் தெரிவித்துள்ளார்.

கீரிமலை பகுதியில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் ஆபத்தான கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அவற்றினை மீள அள்ளுமாறு வலி. வடக்கு பிரதேச சபையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்நிலையில் குறித்த கழிவுகள் முற்றாக அகற்றப்படவில்லை என வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்ததை, அடுத்து நேற்றைய தினம் திங்கட்கிழமை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவ்விடத்திற்கு சென்று இருந்தார்.



அதன் போது, கழிவுகளை மீள அள்ளுவதனை மேற்பார்வை செய்துகொண்டிருந்த ஊழியர் ஒருவர்" நான் வேலைக்கு வந்த 2014 ஆம் ஆண்டு முதல் வைத்தியசாலை கழிவுகள் இங்கே தான் கொட்டப்படுகின்றன.

இது இன்று நேற்று நடப்பது இல்லை என கூறியதுடன், கொட்டப்பட்ட கழிவுகளை அள்ளி சென்று எங்கே கொட்டுவது என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேள்வியும் எழுப்பி இருந்தார்.

அதற்கு வைத்தியசாலையின் அனைத்து கழிவுகளும் மீள அள்ளப்பட வேண்டும் என கடுமையான தொனியில் தெரிவித்தார். அத்துடன் வைத்தியசாலை கழிவுகள் இங்கிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். அதனை உரிய முறையில் கண்காணித்து அது தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அனோஜனைத் தொடர்புகொள்ள முடியவில்லை

- சகோதரர் அதிர்ச்சித் தகவல் -

சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அனோஜன் சிவராசாவைத் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக அவரது சகோதரர் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனோஜனின் சகோதரர் ஹம்சிதன் சிவராசா கருத்து வெளியிடுகையில், கடந்த வாரம் தொடக்கம் எங்களால் அனோஜனைத் தொடர்பு கொள்ள முடியாதுள்ளது.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான உரையாடலின் போதே நாங்கள் கடைசியாக அனோஜனின் குரலைக் கேட்டோம். அதன் பின் தொடர்பு கொள்ள முடியவில்லை.

கொழும்பில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் இருந்து அனோஜன் தொடர்பில் கிடைக்கும் தகவல்கள் தவிர, தற்போதைக்கு எங்களுக்கு வேறு எந்தத் தகவல்களும் தெரியவருவதில்லை.

அதன் காரணமாக நாங்கள் பெரும் கவலையுடன் இருக்கின்றோம். எங்கள் சகோதரனின் விடுதலைக்காக சகல சமூகங்களைச் சார்ந்தவர்களும் வெளிக்காட்டும் நேசம், ஒத்துழைப்பு குறித்து நாங்கள் மனதார நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த விடயத்தில் முஸ்லிம்களும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

ஏனைய இனத்தவர்கள் மீது குரோத உணர்வுடன் இனவெறிக் கருத்துக்களை பரப்புவோர் இருந்தாலும் அதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அந்த சமூகத்தை ஒட்டுமொத்தமாக மதிப்பிட முடியாது என்றும் ஹம்சிதன் சிவராசா தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

அகிம்சையை போதித்தவரின் சிலையை அகற்றியது இனவாதத்தின் உச்சம்

- எழுந்துள்ள குற்றச்சாட்டு -

திலீபன் நல்லூரில் உண்ணாவிரதம் இருந்து இறக்கும் வரை விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்படாத அமைப்பாக இருந்த நிலையில் அகிம்சையை போதித்த தியாக தீபத்தின் திரு உருவச்சிலையை உடைத்து அகற்றியமை அநுர அரசின் இனவாதத்தின் உச்சநிலையை காட்டுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

27.09.2026 அன்று நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் திரு உருவச்சிலை அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெற்ற கவனஈர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்ணன் திலீபன் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அகிம்சை வழியிலே தமிழ் மக்களுக்காக பல கோரிக்கைகளை முன்வைத்து சிங்கள தேசத்துக்கு எதிராக போராடிய ஒரு தியாகி. தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் தனது இன்னுயிரை தமிழ் மக்களுக்காக அகிம்சையின் எடுத்துக் காட்டாக உலகுக்கு போதித்து தனது உயிரை தியாகம் செய்தவர்.

அப்படிப்பட்ட ஒரு தியாகத்துக்கு தமிழ் மக்கள் தமது வழிபடும் உரிமையை நிறைவேற்றுவதற்கு சிங்கள பேரினவாதம் அனுமதிக்க மறக்கிறது.

அதன் ஒரு வெளிப்பாடாகவே நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபத்தின் திரு உருவச்சிலையை இலங்கை பொலிசார் நேற்று ஞாயிற்றுக்கிழமை சப்பாத்து கால்களுடன் நினைவிடத்தில் ஏறி உடைத்து அகற்றிச் சென்றுள்ளனர்.

இந்த செயற்பாடு கீழ்த்தரமானதும் தமிழ் மக்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் சிங்கள பேரினவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமிட்ட செயற்பாடாகும்.

தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்குவோம் என தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கி வந்த தற்போதைய அநுர தலைமையிலான அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக தமது சிங்கள பேரினவாத கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் பார்வதி அம்மாக்கு சிலை வைப்போம் பிரபாகரனுக்கு சில வைப்போம் என தமிழ் மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி வாக்குகளை வேட்டையாடினார்கள்.

அவர்களுடன் இணைந்து யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட நாடாளுமன்ற வேட்பாளர்களும் புலிகளை புகழ்ந்து பேசி வாக்கு வேட்டைகளில் ஈடுபட்டு நாடாளுமன்ற ஆசனங்களை தக்க வைத்தார்கள்.

தேர்தல் முடிந்து இரண்டு வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் வல்வட்டித் துறையில் சிலைகளை வைக்க முடியவில்லை. ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அகிம்சை போராட்டத்தின் எடுத்துக்காட்டாக விளங்கிய தியாக தீபம் திலீபனின் திரு உருவச்சிலையை தமிழ் மக்கள் வழிபட தடுப்பதற்கு அரசின் கைக்கூலிகளுக்கு எந்தவித அருகதையும் கிடையாது.ஆகவே அகற்றப்பட்ட தியாக தீபத்தின் திரு உருவச்சிலையை அதே இடத்தில் நிறுவுவதற்கு அனைவரும் ஊரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கற்சிலையை உடைக்கலாம். தமிழர்களின் நெஞ்சத்தில் உள்ளதை உடைக்க முடியாது

- இயக்குனர் டி. இராஜேந்தர் கண்டனம் -

கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு இருக்கும் தியாக தீபம். அது ஒரு அணையா தீபம். அமர தீபம். அதை என்ன செய்துவிடும் இந்த சிங்களவர்களின் கோபம்.

சிங்கள இனவெறியர்களால் தியாக தீபத்தின் சிலையை உடைக்க முடியும். ஆனால் ஈழத் தமிழர்களின் களங்கமற்ற இதயத்தில் தியாக தீபம் திலீபன் பிடித்த இடத்தினை சிங்கள இனவெறியர்களால் உடைக்கவும் முடியாது, அதை தகர்க்கவும் முடியாது, அதை அகற்றவும் முடியாது என தென்னிந்திய பிரபல திரைப்பட் இயக்குனர் டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

தியாக திபத்தின் திருவுருவச் சிலையை யாழ்ப்பாணம் பொலிஸார் உடைத்து சென்றமை குறித்து கருது தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும்தெரிவிக்கையில், அவர் அன்று இந்தியாவை நோக்கி முன்வைத்த ஐந்து அம்ச கோரிக்கைகள் தமிழ் மக்கள் உள்ளவரை காலாகாலத்திற்கும் நிலைத்திருக்கும். ஆனால் இன்னமும் சிங்களவர்களின் வெறி அடங்கவில்லை.

சிங்களர்களின் அந்த வெறி அடங்காததால் தான் உலகெங்கும் இருக்கின்ற தமிழர்கள் இன்று வரைக்கும் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே தங்களால் முடிந்த அளவு தங்களது கருத்துக்களை பதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்கள் கொதித்துக் கொண்டிருக்கின்றார்கள், தமது கருத்துக்களை பதித்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு கொதிக்கக்கூடிய தமிழர்களில் நானும் ஒருவன் அவர் தெரிவித்துள்ளார்.

தியாகி திலீபனின் சிலை அகற்றம் தமிழர் தாயகத்தில் தொடரும் போராட்டங்கள்

அம்பாறை

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தியாக தீபம் திலீபனின் உருவச் சிலை அகற்றப்பட்டமையைக் கண்டித்து அம்பாறையின் தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் பேரெழுச்சியோடு கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தின்போது வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில், கடந்த பல தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் சந்தித்து வரும் தொடர் அநீதிகளின் ஒரு அங்கமாகவே இச் சம்பவத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

காணாமலாக்கப்பட்ட எமது சொந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மைக்கான நீதியைத் தேடி, வீதிகளில் இறங்கி கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் போராடி வருகிறோம். எமது ஆறாத் துயரத்திற்கு நீதி வழங்கத் தவறிய இலங்கை அரசும் பொலிஸாரும், தற்போது எமது புனிதமான நினைவேந்தல் உரிமைகளையும் பறிக்கத் துணிந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின், நல்லூர் மண்ணில் பலவந்தமாக அகற்றப்பட்ட தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவச் சிலையை, எவ்வித நிபந்தனையுமின்றி, பொலிஸாரின் தலையீடுகளின்றி உடனடியாக மீண்டும் அதே இடத்தில் மீள நிறுவவேண்டும்.

தமிழ் மக்கள் தமது வரலாற்றையும், இன விடுதலைக்காகத் தம் உயிர்களைத் தியாகம் செய்தவர்களையும் நினைவுகூரும் ஜனநாயக உரிமையில் பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் தலையிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

நினைவேந்தல் அடையாளங்களை அழிப்பதன் மூலமும், அமைதி வழியில் போராடும் மக்கள் மீது அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலமும் தமிழ் மக்களின் நீதிக்கான குரலை முடக்கிவிட முடியாது என்பதைப் புரிந்துகொண்டு, இத்தகைய அடக்குமுறைகளை அரசு உடனடி நடைமுறைக்கு வரும் வகையில் கைவிட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார்

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தியாக தீபம் திலீபனின் உருவச் சிலை அகற்றப்பட்டமையைக் கண்டித்து மன்னாரில் போராட்டம் ஒன்று 28.09.2026 அன்று மாலை 3 மணியளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலை அடிக்கு முன்பு குறித்த கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

திலீபனின் உருவச் சிலை அகற்றப்பட்டமையைக் கண்டித்தும், பொலிஸாரின் செயலைக் கண்டித்தும், தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தியும் இந்த கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதிய பதாதையை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதய சந்திரா,சங்க பிரதிநிதிகள்,மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார்,உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த தியாக தீபத்தின் சிலையை பொலிஸார் பெயர்த்து எடுத்து சென்றமையை கண்டித்தும், சிலையை மீள அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும் யாழில் 27, 28, 29ம் திகதிகளில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தியாக தீபத்தின் நினைவாலயம் முன்பாக 28.09.2026 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொங்குதமிழ் நினைவாலயத்தில் ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டமானது வவுனியா பழைய பேருந்து நிலையம் வரையில் இடம்பெற்றது.

இதேவேளை **திருகோணமலை** சிவன் கோயிலடியிலும் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா பகுதியில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் பெருமளவு உணர்வாளர்கள் கலந்துகொண்டு தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவச் சிலை அகற்றப்பட்டமைக்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்துனர்.

கிளிநொச்சியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா

மன்னார்

தியாகி திலீபனின் திருவுருவச் சிலையை
பலவந்தமாக அகற்றிய
ஸ்ரீலங்கா பொலிசாரின் அராஜகத்தை கண்டித்தும்
தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை
வலியுறுத்தியும்
போராட்டம்
28.09.2026
2.00 மணி
CARED

கிளிநொச்சி

யாழ்ப்பாணம்

மட்டக்களப்பு

அனோஜனின் மறுவாழ்விற்காக ஒரு சந்தர்ப்பம் வழங்குக

- சர்வ மதத் தலைவர்கள் கோரிக்கை -

சவுதியில் உள்ள அனோஜன் பதிவிட்ட கருத்திற்காக அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையில் இருந்து அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சவுதி அரசாங்கத்திடம் முன்வைப்பதாக மன்னார் மாவட்ட சர்வ மத தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில்24.09.2026 அன்று மாலை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் சர்வமத பேரவையின் தலைவர் சிவசிறி தர்மகுமார குருக்கள், மன்னார் மூர்வீதி ஜ/ம்மா பள்ளி பிரதம மௌலவி ஏ.எஸ்.எம்.அசீம், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர்.

இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த இரண்டு வார காலமாக எமது இலங்கைத் திருநாட்டில் பேசுபொருளாக மாற்றப்பட்டிருக்கின்ற விடயம் சகோதரர் அனோஜன் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற மரண தண்டனை.

முகப்புத்தக பதிவின் காரணமாக, முஹம்மது நபி பற்றிய அவதூறு வார்த்தை காரணமாக, சவுதி அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தத் தண்டனை நீக்கப்பட வேண்டும், மன்னிக்கப்பட வேண்டும், அவருக்கு வாழ்வதற்கான ஒரு சந்தர்ப்பம் இந்த உலகத்திலே வழங்கப்பட வேண்டும் என்பதற்காக வேண்டி இந்த இடத்திலே நாங்கள் ஒன்று கூடியிருக்கிறோம்.

எனவே உலக முஸ்லிம்களுடைய உள்ளங்களை துன்புறுத்தக் கூடிய, நோவினை ஏற்படுத்தக் கூடிய அவர் பாவித்த அந்த வார்த்தையை, மனிதநேயத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் மன்னித்தாலும் கூட, இது சவுதி அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தண்டனை என்ற அடிப்படையில் அவருக்கு மன்னித்து மறுவாழ்வுக்கான ஒரு சந்தர்ப்பத்தை சவுதி அரசாங்கம் தான் நிச்சயமாக வழங்க வேண்டும்.

எனவே நாங்கள் அந்த அடிப்படையில் சகல சமயத்தவர்களும் இந்த இடத்திலே ஒன்று கூடி, அவருடைய அந்த மறுவாழ்வுக்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று சர்வமத அமைப்பின் சார்பாக சவுதி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் எமது நாட்டு அரசாங்கம் அவருடைய விடுதலைக்காக, தண்டனைக் குறைப்புக்காக தன்னாலான ராஜதந்திர பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று இந்த நாட்டு முஸ்லிம்கள் சார்பாகவும், பள்ளிவாசல் சமூகங்கள், அதேபோன்று அகில இலங்கை ஜமியத்துல் உலமாவின் ஊடாகவும் இப்படியான பணிகளும் செய்யப்பட்டு கொண்டு இருக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம்.

எனவே அந்த அடிப்படையில், மன்னார் மாவட்ட மக்கள் சார்பாகவும் நாங்கள் இந்த இடத்திலே மிக பணிவாக மீண்டும் ஒருமுறை சவுதி அரசாங்கத்திடம் நாங்கள் எங்களுடைய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

அதேபோன்று எங்களுடைய நாட்டு அரசாங்கத்தினுடைய அந்த முயற்சிக்கும் ஒத்துழைப்பை வழங்குகின்றோம். மீண்டும் அவர் அந்த மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு வந்து சமய சகவாழ்வுக்கான தன்னுடைய பங்களிப்பை வழங்குவதற்கான மனமாற்றத்தை இறைவன் அவருக்கு வழங்க வேண்டும்.

எனவே அவருக்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த இடத்திலே கேட்டு, அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்." என தெரிவித்தார்.

அனோஜனை தொடர்புகொள்ள முடியவில்லை

சகோதரர் அதிர்ச்சித் தகவல்

சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அனோஜன் சிவராசாவைத் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக அவரது சகோதரர் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனோஜனின் சகோதரர் ஹம்சிதன் சிவராசா கருத்து வெளியிடுகையில், கடந்த வாரம் தொடக்கம் எங்களால் அனோஜனைத் தொடர்பு கொள்ள முடியாதுள்ளது.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான உரையாடலின் போதே நாங்கள் கடைசியாக அனோஜனின் குரலைக் கேட்டோம். அதன் பின் தொடர்பு கொள்ள முடியவில்லை.

கொழும்பில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் இருந்து அனோஜன் தொடர்பில் கிடைக்கும் தகவல்கள் தவிர, தற்போதைக்கு எங்களுக்கு வேறு எந்தத் தகவல்களும் தெரியவருவதில்லை.

அதன் காரணமாக நாங்கள் பெரும் கவலையுடன் இருக்கின்றோம். எங்கள் சகோதரனின் விடுதலைக்காக சகல சமூகங்களைச் சார்ந்தவர்களும் வெளிக்காட்டும் நேசம், ஒத்துழைப்பு குறித்து நாங்கள் மனதார நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த விடயத்தில் முஸ்லிம்களும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

ஏனைய இனத்தவர்கள் மீது குரோத உணர்வுடன் இனவெறிக் கருத்துக்களை பரப்புவோர் இருந்தாலும் அதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அந்த சமூகத்தை ஒட்டுமொத்தமாக மதிப்பிட முடியாது என்றும் ஹம்சிதன் சிவராசா தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

தியாகி திலீபன் நினைவிடத்தில் ஒலிபெருக்கியை அகற்றிய பொலிஸார்!

தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அனுமதியின்றி ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது எனக் குற்றஞ்சாட்டி, அங்கிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களை யாழ்ப்பாணம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த சம்பவம் 18.09.2026 அன்று இடம்பெற்றுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள பிரதான நினைவுத் தூபிப் பகுதியில் திலீபனின் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், நினைவேந்தல் பாடல்கள் ஒலிபரப்பப்பட்ட போதே பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமையவே இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரிவித்த பொலிஸார், அங்கு பயன்படுத்தப்பட்ட ஒலிபெருக்கி சாதனங்களைப் பறிமுதல் செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பதற்குச் சான்று பகிர்வது போலப் பொலிஸாரின் இந்தச் செயற்பாடு அமைந்திருக்கின்றது என்று அந்த இடத்தில் இருந்தவர்கள் விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஒலிபெருக்கி பயன்படுத்த அனுமதியை பெறுமாறு பொலிஸார் அறிவித்துச் சென்ற நிலையில் ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி சாதனத்திற்காக காவல் நிலையம் சென்றிருந்த வேளை, பொறுப்பதிகாரி இல்லை என திருப்பியனுப்பியுள்ளனர். அந்நிலையில் இன்றைய தினம் சனிக்கிழமை மீண்டும் காவல் நிலையம் சென்ற போதும் திருப்பி அனுப்பியுள்ளனர்

காவல்துறையினர் ஏற்பாட்டாளர்களை அலைக்கழித்ததை அடுத்து, அது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு தகவல் வழங்கியதை அடுத்து , நாடாளுமன்ற உறுப்பினர் வடமாகாண மூத்த காவல்துறை அத்தியட்சகரை தொடர்பு கொண்டு அது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனை அடுத்து , யாழ்ப்பாண தலைமை காவல் நிலைய பொறுப்பதிகாரி , நாடாளுமன்ற உறுப்பினரை தொடர்பு கொண்டு , ஒலிபெருக்கி சாதனம் பெறுவதற்கான அனுமதிக்காக காவல் நிலையத்தில் விண்ணப்பிக்க கூறியதுடன், புலனாய்வாளர்களின் அறிக்கையை பெற்ற பின்னரே அனுமதி வழங்குவதா? இல்லையா என முடிவெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இறுதிநாள் நினைவேந்தல் நிகழ்வு நடந்து முடிவடைந்த போதிலும் பொலிஸார் அதற்கான அனுமதிகளை வழங்கவில்லை என்பதுடன், பறித்துச்சென்ற ஒலிபெருக்கி சாதனங்களையும் மீள வழங்கவில்லை என்பது குறிப்பிடத்க்கது.

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

முள்ளியவளை அஞ்சல் அலுவலக காணியை விடுவியுங்கள்

- ரவிகரன் எம்.பி கோரிக்கை -

முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டு தற்போது இலங்கை இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள காணியை 2026ஆம் ஆண்டுக்குள் விடுவித்து அஞ்சல் திணைக்களத்திடம் முறையாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த காணியில் முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான புதிய நிரந்தரக் கட்டடத்தை 2027ஆம் ஆண்டில் நிர்மாணிக்கத் தொடங்குவதற்குத் தேவையான நிதி மற்றும் நிர்வாக ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா அரியரத்னவுக்கு 2026.09.16 அன்று ரவிகரன் எம்.பி கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த 2026.04.08 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான காணி விடுவிப்பு தொடர்பில் ரவிகரன் எம்.பி கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர், குறித்த காணியை 2026 யூலை மாதத்திற்குள் விடுவிப்பதற்கு இலங்கை இராணுவத்திடமிருந்து வாய்மொழி மூலமான உறுதிமொழி கிடைத்துள்ளதாகவும், காணி விடுவிக்கப்பட்ட பின்னர் அடுத்த ஆண்டில் அங்கு புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும், உறுதியளிக்கப்பட்ட 2026 யூலை மாத காலக்கெடு கடந்துள்ளபோதிலும் குறித்த காணி இதுவரையில் விடுவிக்கப்படவில்லை என ரவிகரன் எம்.பி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். காணி விடுவிப்பு தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் நிலையும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக நிரந்தரக் கட்டடமின்றி வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்ற நிலையில், அதற்காக ஒதுக்கப்பட்ட காணி 1986ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் கையகப்படுத்தலில் இருப்பதாகவும் பாராளுமன்ற விவாதத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நீண்டகாலமாக நிரந்தர அஞ்சல் அலுவலகக் கட்டடத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் முள்ளியவளை மற்றும் அதனைச் சூழவுள்ள மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என ரவிகரன் எம்.பி கோரியுள்ளார்.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் அஞ்சல் சேவையை மேம்படுத்தும் வகையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் வரவேற்றுள்ளார். குறிப்பாக முல்லைத்தீவுக்கான அஞ்சல் பரிவர்த்தனை வாகனம் வழங்கப்பட்டமை, புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டமை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அலுவலகக் கட்டட நிர்மாணம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அவர் தனது பாராட்டையும் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சாதகமான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியை நடைமுறைப்படுத்தும் வகையில் முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான காணியை இராணுவக் கையகப்படுத்தலில் இருந்து இந்த ஆண்டுக்குள் விடுவித்து அஞ்சல் திணைக்களத்திடம் முறையாகக் கையளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக நிரந்தரக் கட்டடத்திற்காக காத்திருக்கும் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், 2027ஆம் ஆண்டில் புதிய முள்ளியவளை அஞ்சல் அலுவலகக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதி மற்றும் நிர்வாக ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ரவிகரன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தின் பிரதிகள் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அஞ்சல்மா அதிபர், இலங்கை இராணுவத் தளபதி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசின் நினைவுகளின் இடித்தழிப்பு



1988ம் ஆண்டு இதே இடத்தில் கட்டப்பட்ட நினைவுத்தூபி. 1996இல் சிறிலங்கா அரச படைகளால் இடித்து அழிக்கப்பட்டது.



தியாகதீபம் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூரின் வீதியில் அமைக்கப்பட்ட நினைவுக்கல்வெட்டு 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறிலங்கா அரச படைகளால் இடித்து அழிக்கப்பட்டது



2003இல் மீள அமைக்கப்பட்ட நினைவுத்தூபியின் தோற்றம்



2007ம் ஆண்டு நவம்பர் மாதம் சிறிலங்கா அரச படைகளால் இடித்து அழிக்கப்பட்டது.